Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.89**/2022**

Deposition of PW3 Witness for Defence
Defence Court

Name :M.Ashok Kumar Calling :
Father's Name :Mathakan Village :
Age : Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03th day of December 2024.

(**A1 to A3 are present.**)

(மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை

**எனது பெரியப்பாவின் பெயர் சண்முகம். அவரது மனைவியான எனது பெரியம்மாவின் பெயர் எனக்கு தெரியாது. பட்டியல் சாட்சி 9 ஆனந்த் ராஜ் எனது உடன் பிறந்த சகோதரர். வினோத்தின் தாயார் பார்வதியும் அ.சா.1 தனபாக்கியமும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். இறந்து போன அசோக் குமார் எனது உறவினர். சம்பவ தேதி 12.12.2020. இரவு 09.00 மணிக்கு மேல் நான் கடைக்கு சென்றேன். பக்கத்திலுள்ள மளிகை பொருட்கள் இருக்கம் பங்க் கடைக்கு மளிகை சாமான் வாங்க சென்றேன். அன்றைக்கு நான் சிகிரேட் மற்றும் காய்கறி வாங்கினேன். நான் கடைக்கு செல்லும் போதே அசோக்குமாரும் முத்துவும் சண்டை போட்டுக்கொண்டிருந்ததை பார்த்தேன். நான் அவர்கள் சண்டை போடுவரை பார்த்துவிட்டு கடைக்கு சென்று பொருட்கள் வாங்கிவிட்டு திரும்பி அதே இடத்திற்கு வருவதற்கு சுமார் 5 நிமிடங்கள் ஆகி இருக்கும். நான் கடைக்கு சென்று கொண்டிருந்த போது அவர்கள் இருவரையும் விலக்க முயற்சித்தேனா என்றால் அவர்கள் அப்போது வாய்**

தகராறில் ஈடுப்பட்டிருந்ததால் நான் முயற்சிக்கவில்லை. நான் கடைக்கு போய்விட்டு திரும்பி வந்த போது அவர்கள் இருவரையும் விலக்க முயற்சித்தேனா என்றால் இல்லை. நடந்ததாக சொல்லப்படும் சண்டை பிரதான மெயின் ரோட்டில் நடைபெற்றது. அப்போது அந்த இடத்தில் ஆட்கள் இருந்தார்களா என்றால் 2–3 பேர் இருந்தார்கள். அப்போது அங்கிருந்த மக்கள் அசோக்குமாரையும் முத்துவையும் தடுக்கவோ, விலக்கவோ எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்த அசோக்குமார் கையில் ஏதாவது ஆயுதம் இருந்ததா என்றால் இல்லை. நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் நான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 15 அடி இருக்கும். சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் பொதுமக்களின் குரல் கேட்டவுடன் அங்கிருந்து ஓடிவிட்டனர் என்றால் சரிதான். அவர்கள் தங்களின் ஆயுதங்களை சம்பவ இடத்திலேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். சம்பவம் நடைபெற்றவுடன் நான் இறந்து போன அசோக்குமாரை நான் தூக்கி பார்த்தேன். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நா ன் உடனே அவரை அங்கேயே கிடத்திவிட்டு அவரது குடும்ப உறுப்பினர்களுக்க சொல்வதற்கு அவரது வீட்டிற்கு சென்றேன். அவருக்கு தண்ணீர் கொடுப்பதற்கோ, முதலுதவி செய்வதற்கோ நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அவரை எனது கையினால் தூக்கிய போது எனது உடைகளில் இரத்தம் படவில்ரைல. எனது கையில் இரத்தம்பட்டது. எனது கையில் குறைவாக பட்ட இரத்தத்துடன் நான் அசோக்குமாரின் வீட்டிற்கு தகவல் அளிக்க சென்றேன். அசோக்குமார் அப்போது ஜீன்ஸ் பேண்டும், வெள்ளை சட்டையும் அணிந்திருந்தார். சம்பவ இடத்திலிருந்து இறந்து போன அசோக்குமாரின் வீடு சுமார் 250–300 மீட்டர் தூரம் இருக்கும். திருவள்ளூரிலிருந்து பூந்தமல்லி செல்லும் சாலையில் இடது புறத்தில் சாலை ஓரமாக சம்பவம் நடைபெற்றது. நானோ மற்றவர்களோ சாலையின் ஓரமாக கிடந்திருந்த அசோக்குமாரை தூக்கி பிளாட்பாரத்தில் கிடத்துவதற்கு முயற்சி ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை. நான் லாரி டிரைவராக இருந்து வருகிறேன். அடிப்பட்டவரை மருத்துவ மனைக்கு எடுத்து செல்லவேண்டும்ட என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டதா என்றால் ஆம், ஆனால் முதலில் அவரது குடும்பத்தினருக்கு தகவல் அளிக்க சென்றுவிட்டேன். என்னால் அந்த நேரத்தில் அவரை மருத்துவ மனைக்கு அழைத்து செல்ல முடியவில்லை. அசோக்குமாருக்கு ஒரே ஒரு காயம் இடது

விலாப்பகுதியில் காயம் ஏற்பட்டிருந்ததை பார்த்தேன். நான் சம்பவத்தை இரவு 09.00–09.30 மணியளவில் பா ர்த்தேன். நான் சம்பவத்தை அசோக்குமாரின் அம்மா, அண்ணன் மற்றும் தம்பி ஆகியோரிடம் தெரிவித்தேன். அதன் பின்னர் அவரது தாயாரும், தம்பியும் என்னுடன் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அவரது அண்ணன் காரில் சம்பவ இடத்திற்கு வந்தார். அசோக்குமாரின் தம்பியின் பெயர் எனக்கு தெரியாது. அசோக்குமரின் அண்ணன் பெயர் கார்த்தி. அவர் தான் காரை கொண்டு வந்தார். தனபாக்கியம்மாள் காயம் பட்ட தனது மகன் அசோக்குமாரை மடியில் கிடந்தி அழுதார். அவர்கள் முதலுதவி ஏதேனும் செய்தார்களா என்றால் இல்லை. காரில் ஏற்றி மருத்துவ மனைக்கு எடுத்து சென்றார்கள். தனபாக்கியம்மாள் அசோக்குமாரை வைத்து இருந்த போது அவரது சேலையில் இரத்தம்பட்டிருந்தது. அசோக்குமாரின் சகோதரர்களின் உடைகளில் அவரை காரில் துாக்கி வைக்கும் போது இரத்தக்கறை பட்டதா என்பதை நான் கவனிக்கவில்லை. அங்கிருந்து திருவள்ளூர் மருத்துவ மனைக்கு அவரை எடுத்து செல்வதாக சொல்லிவட்டு சென்றார்கள். நான் அவர்களுடன் மருத்துவ மனைக்கு செல்லவில்லை. அசோக்குமார் இறந்துவிட்ட விவரம் எனது நண்பர் ஜெகன் மூலம் தெரிந்தது. சம்பவ இடத்திலிருந்து இரவு சுமார் 09.40 மணியளவில் அசோக்குமாரின் தாயாரும் சகோதரர்களும் அவரை மருத்துவ மனைக்கு எடுத்து சென்றார்கள். போலீசார் என்னை சம்பவ தினத்தன்றே சம்பவ இடத்திலே பேருந்து நிறுத்தம் அருகில் இரவு சுமார் 11.00 மணியளவில் விசாரித்தார். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை சம்பவ தினத்தன்று என்னை விசாரிக்கவில்லை என்றும், 22.07.2022 அன்று தான் விசாரித்தார்கள் என்றும் ஆதலால் தான் எனது வாக்குமூலத்தை 22.07.2022 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இரவு 09.45 மணியளவில் அசோக்குமாரை மருத்துவ மனைக்கு எடுத்து சென்றவுடன் நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்னர் போலீசார் என்னை அழைத்தன் பேரில் நான் சம்பவ இடம் வந்தேன். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு சம்பவத்தை காவல் நிலையத்தில் போய் சொல்லவேண்டும் என்று தோன்றவில்லை என்றால் சரிதான். எனக்கு காய்ச்சல் ஏற்பட்டுவிட்டது. சம்பவ இடத்தில் தடுப்புகளை அமைத்து போலீசார் அந்த இடத்திலி இருந்த இரத்தக்கறை மற்றும் பொருட்களை கைப்பற்றியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அங்கு

போலீசார் சாலையின் போக்குவரத்தை சரி செய்து கொண்டிருந்தார்கள் என்றால் போக்குவரத்து நெரிசல் எதுவும் ஏற்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும் வரை நான் அவர்களிடம் தானாக சம்பவம் குறித்து சொல்லவில்லை. இவ்வழக்கு சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்பது எனக்கு தெரியாது. புகார் கொடுக்கும் போது நான் உடன் செல்லவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும் போது 12/12/2020 அன்று இரவு 09.30 மணியவில் புதுசத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே நான் கடைக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்தேன் என்றும் அப்போது முத்துவும் அசோக் குமாரும் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் நான் கடைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்த போது, பார்த்த போது முத்து , ராஜா மற்றும் சதீஷ் ஆகியோர் அசோக் குமாரோடு சண்டை போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். போலீசார் விசாரணையின் போது நான் அசோக்குமாரின் வீட்டிற்கு சென்று தகவல் தெரிவித்தாக சொன்னேனா என்றால் இல்லை. மேலும் போலீஸ் விசாரணையின் போது, உடனே அசோக்குமாரின் பெற்றோர்கள் மற்றும் உடன் பறிந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும் அசோக்குமாரின் அண்ணனின் காரில் திருவள்ளூர் அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. போலீஸ் விசாரணையின் போது, அசோக்குமார் சத்தம் கேட்டு கையில் கட்டையுடன் ஓடி வந்தான் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையின் போது, 12.12.2020 ஆம் தேதி இரவு சுமார் 08.30 மணிக்கு எங்கள் பகுதியை சேர்ந்த ராஜாவின் மகன் முத்து செல்போனில் சத்தமாக ரவியின் மகன் அசோக்குமார் செல்போனால் தன்னை அடித்துவிட்டதாகவும் அதனால் தனக்கு தலையில் அடிப்பட்டு இரத்தம் வந்துவிட்டது என்றும் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. இறந்து போன அசோக்குமார் விஜய் மக்கள் இயக்கம் என்ற அமைப்பில் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். நான் அந்த அமைபில் எப்பொறுப்பிலும் இல்லை. சம்பவ நடந்ததாக சொல்வதாக சொல்லப்படும் இடத்தில் புரட்சி பாரதம் கட்சியின் கொடிக்கம்பமும் கல்வெட்டும் உள்ளது என்றால் சரிதான். இறந்து போன அசோக்குமாருக்கு குடிப்பழக்கம் உள்ளது. அசோக்குமார் குடிப்பழக்கத்தின் காரணமாக மேற்கூறிய இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் அன்றைய தினம் குடித்துவிட்டு அங்கிருந்த மற்ற கட்சிக்காரர்களுடன் தகராறு செய்தார் என்றும் அதன் காரணத்தினால் ஏற்பட்ட சம்பவத்தில் அவருக்கு காயம்

ஏற்பட்டு அவர் இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றும் இறந்து போன அசோக்குமாரின் உறவினர் என்ற முறையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்லியிருப்பது போல் நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் பார்க்கவில்லை என்று  சொன்னால் சரியல்ல.